Legis–Alert என்பதாக கட்டுரை தொகுப்பு—இதுவரை 12 இதழ்களாக சுமார் 600 கட்டுரைகள் பல்வேறு இதழ்களிலிருந்து பொருள்வாரியாக தொகுக்கப் பெற்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெறுகிறது. நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இதனை பயன்படுத்திக் கொண்டுள்ளனர்.

பேரவை நடவடிக்கைகள் மட்டும் தட்டச்சு செய்யப் பெற்றுள்ள பக்கங்கள் 8,294 பக்கங்கள்

பேரவை கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்துள்ள உறுப்பினர்கள் 5

1. திரு. நா. குலசேகர பாண்டியன்
2. திரு. ஆர். சக்கரபாணி
3. திரு. இரா. சண்முகம்
4. திரு. வி. சி. சண்முகம்
5. திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன்

பேரவை நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வானொலி, தொலைக்காட்சி நிலையத்தினருக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற நமக்கு மிகவும் ஒத்துழைப்பு தந்த சட்டமன்றப் பேரவைச் செயலர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலர்ளர்கள் அனைவருக்கும் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவையை ஒத்தி வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் இப்போது தீர்மானத்தை மொழிவார்கள்.

7. அரசினர் தீர்மானம் (தொடர்ச்சி)

இ. நாள் குறிப்பிடாமல் பேரவை ஒத்திவைக்கப் பெறுவது:—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 41 நாட்களாக நிதி நிலை அறிக்கையின்மீது பொது விவாதமும் மானியக் கோரிக்கைகளின் மீது விவாதமும் நடைபெற்று சிறப்பாக முடிந்திருக்கிறது.

1981 மே 14] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஒவ்வொரு துறையைச் சேர்ந்த அமைச்சர்களும் அந்தந்தத் துறையைப் பற்றிய, ஆற்றிய பணிகளையும் ஆற்ற வேண்டிய பணிகளையும் சிறப்பாக எடுத்துத் தெரிவித்தார்கள். தாங்களும் இந்தச் சட்டமன்றத் துறையின் சார்பாக ஆற்றப்பட்ட பணிகளையெல்லாம் இங்கே பட்டியல் போட்டு சிறப்பாகக் காட்டியிருக்கிறீர்கள். அதற்காக அவைத் தலைவருக்கு இந்த மன்றத்தின் சார்பாக, அனைத்து உறுப்பினர்கள் சார்பாக, உளங்கனிந்த நன்றியை, அனைவரின் சார்பாக நான்தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். (மேசையொலி) இங்கே ஆக்கபூர்வமான பணிகள் என்ன, என்ன நடைபெற்றன என்பதை எல்லாம் தெளிவாக தங்களுடைய பட்டியல் அறிக்கையிலே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறீர்கள். அதைத் தொடர்ந்து இந்த மன்றம் தன்னுடைய நோக்கத்தை, குறிக்கோளைச் சிறப்பாக நிறைவேற்றுவதற்கு இந்த அவையிலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களுடைய ஒத்துழைப்புத் தொடர்ந்து இருக்கும் என்ற நம்பிக்கையினுடைய அடிப்படையில் இந்த ஒத்துழைப்பை நாங்கள் அனைவரும் சேர்ந்து தருவோம் என்கின்ற உறுதிப்பாட்டினைத் தெரிவித்து மீண்டும் உங்களுக்கு இந்த அவையின் சார்பாக, அனைவருடைய சார்பாக நன்றியைத் தெரிவித்து, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

> ''பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்தி வைக்கப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

பின்னர் பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11. பேரவைமுன் வைக்கப் பெற்றஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

286. தமிழ்நாடு 1951ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்குச் சட்டத்தின் விவர அட்டவணையில் சில அத்தியாவசியப் பொருட்களைச் சேர்த்துக்கொள்ளும் வகையில் விதி ஒன்றினை உருவாக்குவது குறித்து உணவு கூட்டுறவுத் துறையின் 16–12–1980ஆம் தேதியிடப் பெற்ற 695 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1951 ஆம் ஆண்டு சேமிப்பு கிடங்கு சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/195) 27 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது],

287. தமிழ்நாடு 1965 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்த (உபரி நிலங்களை ஒருவகை செய்தல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 24–3–1980 ஆம் தேதி